வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
Wentworthville Tamil Study Centre Inc
info@wtsc.org.au
www.wtsc.org.au

# பேச்சுப் போட்டி - 2024

**ஆண்டு 7**

**(போட்டி நடைபெறும் நாள் 25/05/2024)**

அனைவருக்கும் வணக்கம்.

## நேர்பட ஒழுகு.

ஆத்திசூடியில் கூறப்படும் நன்னெறிகளில் ஒன்று நேர்பட ஒழுகு. வாழ்க்கைக்குத் தேவையான முக்கியமான ஒழுக்கம் நேர்மை ஆகும். நேர்மை என்பது கருணை, அன்பு, உண்மை, மரியாதை போன்ற நல்லொழுக்கங்களை உள்ளடக்கியது. நேர்மை தமிழரின் சிறந்த அறம் ஆகும்.

நேர்மையான பண்புகளைக் குழந்தைப் பருவத்தில் இருந்தே கற்றுக்கொள்ள வேண்டும். பெற்றோர்களும் ஆசிரியர்களும் இவற்றைக் கற்றுக்கொடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். இதன் மூலம் ஒரு நேர்மையான, பண்பான சமூகத்தையும் சிறந்த தலைவர்களையும் உருவாக்க முடியும்.

தலைமைத்துவப் பண்புகளில் நேர்பட ஒழுகுதல் முக்கியமானது. ஒரு மனிதன் நேர்மையை கடைப்பிடிக்கும்போது, சமூகம் அவனை மதிக்கிறது. அவன் கருத்துகளில் நம்பிக்கை வைத்து அவனைத் தலைவனாக ஏற்றுக்கொள்கிறது.

தமிழ் இலக்கியங்கள் நேர்மையையும் நீதியையும் எமக்கு வலியுறுத்துகின்றன. பாரதியார் கூறியபடி “அச்சம் தவிர்ப்போம். நேர்படப் பேசுவோம். நன்றே கருதுவோம். வையத் தலைமை கொள்வோம்”.

நன்றி. வணக்கம்.